## வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு!

# தமிழ்நாட்டில் 97.37 இலட்சம் வாக்காளர்கள் நீக்கம்!



சென்னை.டிச.21-

தமிழ்நாடு முழுவதும் வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று (டிசம்பர் 19) வெளியிடப்பட்டது.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணியின் போது (எஸ்.ஐ.ஆர்) கணக்கீட்டுப் படிவத்தை நிரப்பிச் சமர்ப்பித்தவர்களின் பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் எனத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இறந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், வாக்காளர் பட்டியலில் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பதிவு செய்தவர்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு பெயர்கள் தமிழ்நாடு முழுவதும் நீக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் பிற்பகல், அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த ஆட்சியர்கள், மாவட்ட அளவிலான வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டனர்.

தமிழ்நாடு முழுவதும் என்ன நிலவரம்?

தொடர்ந்து, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்களைச் சந்தித்து மாநில அளவிலான வரைவு வாக்காளர் பட்டியல் குறித்த விவரங்களை தெரிவித்தார்.

- எஸ்.ஐ.ஆர் பணிகளுக்கு முன்பு தமிழ்நாட்டின் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை: 6.41.14.587
- எஸ்.ஐ.ஆர் பணிகளுக்குப் பிறகான வாக்காளர் எண்ணிக்கை: 5.43.76.755
- தமிழ்நாடு முழுவதும் மொத்தமாக நீக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை: 97.37.832
- தற்போது உள்ள வாக்காளர்களில் பெண் வாக்காளர்கள்: சுமார் 2. 77 கோடி
- ஆண் வாக்காளர்கள்: சுமார் 2. 66 கோடி
- மூன்றாம் பாலினம்: 7,191
- மாற்றுத் திறனாளிகள்: சுமார் 4.19 லட்சம்

19 DEC 2025 S.I.R தமிழ்நாடு SUN NEWS

| மாவட்டம் | நீக்கம் | % | மாவட்டம் | நீக்கம் | % |
|---|---|---|---|---|---|
| அரியலூர் | 24,368 | 4.6% | கிருஷ்ணகிரி | 1,74,549 | 10.3% |
| ஈரோடு | 3,25,429 | 16.3% | தென்காசி | 1,51,902 | 10.8% |
| திருப்பூர் | 5,63,785 | 23.1% | சென்னை | 14,25,018 | 35.5% |
| கோவை | 6,50,590 | 20.1% | தேனி | 1,25,739 | 11.1% |
| கன்னியாகுமரி | 1,53,373 | 9.6% | திருவாரூர் | 1,29,480 | 12% |
| சிவகங்கை | 1,50,828 | 12.2% | சேலம் | 3,62,429 | 11.9% |
| விருதுநகர் | 1,89,964 | 11.6% | திருப்பத்தூர் | 1,16,739 | 11.6% |
| பெரம்பலூர் | 49,548 | 9.1% | செங்கல்பட்டு | 7,01,871 | 25.2% |
| தூத்துக்குடி | 1,62,527 | 10.9% | நீலகிரி | 56,091 | 9.5% |
| கடலூர் | 2,46,818 | 11.3% | கரூர் | 79,690 | 8.8% |
| நாகை | 57,338 | 10% | திருவண்ணாமலை | 2,51,162 | 11.8% |
| திருச்சி | 3,31,787 | 14% | காஞ்சிபுரம் | 2,74,274 | 19.6% |
| தஞ்சை | 2,06,503 | 9.8% | மயிலாடுதுறை | 75,378 | 9.6% |
| மதுரை | 3,80,474 | 13.9% | ராணிப்பேட்டை | 1,45,157 | 13.7% |
| நாமக்கல் | 1,93,706 | 13.2% | புதுக்கோட்டை | 1,39,587 | 10.1% |
| நெல்லை | 2,14,957 | 15.1% | திருவள்ளூர் | 6,19,777 | 17.3% |
| தருமபுரி | 81,515 | 6.3% | கள்ளக்குறிச்சி | 84,329 | 7.3% |
| விழுப்புரம் | 1,82,865 | 10.5% | வேலூர் | 2,15,025 | 16.5% |
| ராமநாதபுரம் | 1,17,364 | 9.7% | மொத்தமாக நீக்கப்பட்டவர்கள் | 97,37,832 | |
| திண்டுக்கல் | 3,24,894 | 16.8% | | | |

## இராணிப்பேட்டை மாவட்டத்தில் அதிகரித்து வரும்

# புற்று நோயாளிகளுக்கு, ஒன்றிய அரசின் உதவி கிடைக்குமா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் வேண்டுகோள்!

புதுடெல்லி, டிச. 21-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 16 டிசம்பர் 2025 அன்று மக்களவையில், ராணிப்பேட்டை மாவட்டத்தில் அதிகரித்து வரும் புற்று நோயாளிகளுக்கென, ஒன்றிய அரசின் சுகாதாரத் துறையின் மூலம், தேவையான மருத்துவ உதவியை வழங்க வேண்டும் என்று மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா அவர்களிடம் நாடாளுமன்ற விதி எண். 377ன் படி வேண்டுகோள் விடுத்தார்.



மேலும் அவர் கூறியதாவது:

தமிழ்நாடு அரசின், சுகாதாரத் துறையின் கீழ் அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் நடத்தப்பட்ட ஆய்வின் போது 9500க்கும் அதிகமானோர் மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளது கண்டறிப்பட்டுள்ளது என்றும், ஆனால் ராணிப்பேட்டை மாவட்டத்தில் புற்று நோய் சிகிச்சைக்கான மருத்துமனையோ. அல்லது மாவட்ட சிகிச்சை மையமோ இல்லை என்றும், தொழிலாளர்களே பெரும்பாலும் பாதிக்கப்படுவதால், அவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக தொலைவிலுள்ள வேலுருக்கோ அல்லது சென்னைக்கோ செல்ல வேண்டியுள்ளது என்றும், வியாதியினால் துன்பப்படும் தொழிலாளர்களும் ஏழைகளும் மேலும் அதிக பொருட்செலவை சிகிச்சைக்காக மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் எனவே பிரச்னையின் அவசரம் கருதி ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை உடனடியாக புற்று நோய் சிகிச்சை மையத்தை அரக்கோணத்திலேயே அமைத்திட ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை அமைச்சருக்கு மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா அவர்களிடம், நாடாளுமன்ற விதி எண். 377ன் கீழ், அரக்கோணம் திமுக நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் ஜெகத்ரட்கன் அவர்கள், மக்களவையில் வேண்டுகோள் விடுத்தார்.

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்திற்கான மாற்றான திட்டத்திற்கு எதிர்ப்பு!

# புதிய திட்டத்தில் ஊதியம் ரூ.500 வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்!

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.21

நாடாளுமன்றத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்துக்கு மாற்றாக கொண்டு வரப்பட்ட புதிய மசோதாவை கடுமையாக எதிர்த்து உரையாற்றிய திமுக எம். பி. கிரிராஜன், தினசரி ஊதியம் ரூ. 500 வழங்கப்படுவதையும், கட்டாய வேலை நாட்களின் எண்ணிக்கை 150ஆக உயர்த்தப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.

கிராமப்புற வேலைவாய்ப்புக்காக கடந்த 2005ம் ஆண்டு, 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம்' கொண்டுவரப்பட்டது. அதில், தகுதியுள்ள ஒவ்வொரு கிராமப்புற குடும்பத்துக்கும் ஒரு நிதியாண்டில் 100 நாட்கள் வேலை அளிக்கப்படுகிறது. இது, 100 நாள் வேலைத்திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

இத்திட்டத்தை நீக்கிவிட்டு, வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்கு பார்வையுடன் கிராமப்புற வேலைவாய்ப்பை பிணைக்கும்வகையில், வேலை வாய்ப்புக்கான வளர்ச்சியடைந்த பாரத உத்தரவாத திட்டம் கொண்டுவரப்படுகிறது.

அதன்படி, விக்சித் பாரத் ரோஜ்கர்அஜீவிகா மிஷன் (கிராமின்) அதாவது ஊரக வேலைத் திட்டம் மசோதாவை மத்திய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை மந்திரி சிவராஜ் சிங் சவுகான் மக்களவையில் நேற்று முன்தினம் அறிமுகம் செய்தார். இதற்கு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் எதிர்ப்புக்குரலை பலமாக எழுப்பினர். இதற்கிடையே குரல் வாக்கெடுப்பின் மூலம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது.

ஒன்றிய அரசின் புதிய திட்டத்தை எதிர்த்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய திமுக எம்.பி. இரா.கிரிராஜன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்துக்கு மாற்றாக கொண்டுவரப்பட்டுள்ள புதிய திட்டத்தை கடுமையாக எதிர்ப்பதாகவும், புதிய திட்டத்திற்கான பெயரை கேட்டுக்கும்போதே அந்த பெயரை சூட்டியர்வர்களின் கீழ்தரமான மனநிலையை புரிந்துகொள்ள முடிவதாக கடும் கண்டனத்தை பதிவுசெய்தார்.

### மகாத்மா காந்தி பெயரை நீக்குவது கண்டனத்திற்குரியது!

திட்டத்திலிருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்குவது ஆட்சேபனைக்குரியது என்றும், நியாயப்படுத்த முடியாதது என்றும்,இந்தியர்களின் உணர்வுகளுக்கு எதிரானது என்றும் குற்றம்சாட்டினார். மகாத்மா காந்தியின் பெயரிலான திட்டத்தின் தீவிர ஆதரவாளராக தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்த திட்டத்தை ஊரக பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருப்பதாக கூறுவதாக தெரிவித்தார்.

இந்த திட்டத்தால் 2005 முதல் 2025ஆம் ஆண்டு வரையில் 15 கோடி மக்களை வறுமை நிலையிலிருந்து முன்னேற்றியுள்ளதாக தெரிவித்தார். இந்த திட்டத்தை நடத்த ஒன்றிய அரசுக்கு ஆர்வமில்லாத்ததால் தான், பெயரை மாற்றியுள்ளதா என்ற அச்சம் மக்களிடயே நிலவுவதாகவும், பல்வேறு கலாச்சாரம், மொழி ஆகியவற்றை பின்பற்றினாலும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் மனப்பான்மையை மக்களின் மனதில் விதைத்த பெருமைக்குறியவர் மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்கள் என்றும் ஒன்றிய அரசுக்கு எடுத்துரைத்தார். ஆனால் அவர்களின் பெயரை அரசு திட்டங்களில் இருந்து நீக்குவதை பார்க்கும் போது அரசின் பலவீனமான மானநிலையை காட்டுவதாக தெரிவித்தார்.

மகாத்மா காந்தியின் பெயரை நீக்குவதாலோ அல்லது அவரது படத்தை அகற்றுவதாலோ உலகம் முழுவதும் பரவியுள்ள அவரது புகழை மறைக்க முடியாது என்பதை பாஜக அரசும், பிரதமர் மோடி அரசும் புரிந்துகொள்ள வேண்டும் என்றும், போகுமிடமெல்லாம்

சுப்பிரமணிய பாரதியாரை மேற்கோள்காட்டும் பிரதமர் மோடி, காந்தியடிகளின் பெருமை குறித்து பாரதியார் பாடியதையும் தெரிந்துகொள்ள வேண்டும் எனக் கூறி, "வாழ்க எம்மான, இவ்வையாத்துள்" என்ற பாடலை பாடினார். காந்தி இறந்த போது இந்திய நாட்டுக்கு "காந்தி தேசம்" என்று பெயரிட சொன்னதையும் சுட்டிக்காட்டினார்.

### கிராமங்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி!

கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு, கிராமகங்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி, கிராம பொருளாதாரம் வழுவாக இருந்தால்தான் நாட்டின் பொருளாதாரம் உயரும், கிராமப்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தால்தான் கிராமப்புற குடும்பங்கள் முன்னேறும், கிராம பொருளாதாரம் வழுவாக இருந்தால்தான் பட்டினிச்சாவுகளை தடுக்க முடியும் என்ற காந்தியடிகளின் பொன்மொழிகளை மேற்கோள்காட்டிய திமுக எம்.பி. கிரிராஜன், ஏழைகளின் பாதுகாப்பு கவசமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம் இருந்ததாக குறிப்பிட்டார். இந்த உயர்ந்த நோக்கங்களுடன் கொண்டுவரப்பட்ட திட்டத்தின் பெயரைத்தான் மாற்றமுடியுமே தவிர திட்டத்தை நிறுத்த முடியாது என குறிப்பிட்டார். அதனால்தான் மார்டின் லூதர் கிங் ஜீனியர் மற்றும் நெல்சன் மண்டேலா ஆகியோர் காந்தியடிகளை ஏற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

திமுக அங்கம் வகித்த ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி காலத்தில் தான் இந்த திட்டம் கொண்டுவரப்பட்டதாகவும், இது மட்டுமல்லாமல் வேலைவாய்ப்பு உரிமைச் சட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டம், கல்வி உரிமைச் சட்டம், பணி உரிமைச் சட்டம் போன்ற உன்னதமான திட்டங்கல் கொண்டுவரப்பட்டன என்றும் ஒன்றிய அரசின் கவனதுக்கு கொண்டுவந்தார். இத்தனை ஆண்டுகாலம் இந்த நாடு வளத்தோடு இருக்கிறதென்றால், அன்று ஆட்சிபுரிந்த ஐக்கிய முறபோக்கு கூட்டணி @@@ முதல் ஆட்சிதான் காரணம் என்பதையும் தெளிவுபடுத்தினார்.

இந்த திட்டத்தை மெல்ல மெல்ல @@@ ஒழிக்க வேண்டும் என்ற உங்கள் நோக்கத்தின் காரணமாகவே, திட்டத்துக்கான ஒன்றிய மற்றும் மாநில அரசின் பங்களிப்பு 90:10 என்று இருந்ததை, 60:40 ஆக மாற்றியுள்ளீர்கள் என்றும், @@@ எப்படி சமையல் எரிவாயுவுக்கு வங்கி கணக்கில் நேரடி மானியம் என கூறி எப்படி அந்த திட்டத்தை வழக்கொழிந்து போகச்செய்தீர்களோ அதைபோலவே இந்த திட்டத்தையும் வழக்கொழிந்து போகச்செய்யத்தான் வழிவாகுத்துக்கொண்டு இருக்கிறீர்கள் என்ற குற்றம் சாட்டினார்.

புதிய @@@ பெயரிடப்பட்ட திட்டத்தில் 125 வேலை நாட்கள் என்பது ஏமாற்று வேலை என்றும் கூறி, சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர் எங்களால் 50 நாட்களுக்கு மேல் வேலை கொடுக்க முடியவில்லை என்று சொன்னதையும் சுட்டிக்காட்டி, அதையே பல புள்ளிவிவரங்களும் தெரிவிப்பதாகவும் கூறினார்.

பிரதமர் மோடி அரசு நாட்டின் அனைத்து செல்வங்களையும் அதனிக்கும், அம்பானிக்கும் கொடுக்க விரும்புகிறது என்று குறிப்பிட்ட திமுக எம். பி. கிரிராஜன், அதனால்தான் நாட்டின் ஏழைக்களும், தொழிலாளர்களும் வீதிக்கு வந்துவிட்டார்கள் என்றும் குறிப்பட்டார்.

இந்திய நாட்டின் சாமானிய மக்களின் வேலைவாய்ப்புக்கான உத்தரவாதமாக இருந்த திட்டத்தின் பெயர் மாற்றம் என்பது அரசியலமைப்பின் மீதான தாக்குதல் என்றும், இதன் மூலம் வேலைவாய்ப்பு என்பது இனி காகித அளவிலேயே வைப்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் குற்றச்சாட்டை முன்வைத்தார். அனுசக்தி துறையில் அன்னியரை அனுமதித்து தனியார்மயமாக்கும் வகையில் மற்றொரு மசோதாவும் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

### பா.ஜ.க.வின் உண்மை முகம்!

அண்ணல் அம்பேத்கர் பெயரை அடிக்கடி சொல்வது பேஷனாகிவிட்டதாகவும், அதற்கு பதிலாக கடவுளின் பெயரை சொன்னால் ஏழேழு ஜென்மத்திற்கும் சொர்க்கத்தில் இருப்பீர்கள் என கடந்த ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியதை சுட்டிக்காட்டிய எம்.பி. கிரிராஜன், இப்போது மகாத்மா காந்தி பெயரிலான திட்டத்திலிருந்து அவரது பெயரை நீக்கியதான் மூலம் உங்களது உண்மையான முகம் தெரிந்து விட்டது.

இதேபோல கடந்த வாரம் வந்தே மாதரம் என்ற பெயரில் முன்னாள் பிரதமர் நேருவை வஞ்சித்தபோது, அவையோரின் கடும் கோபத்துக்கு ஒன்றிய அரசு ஆளானதாகவும் குற்றச்சாட்டை முன்வைத்தார். காந்தி, அம்பேத்கர், நேரு ஆகியோரின் தத்துவங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நமது ஜனநாயக மற்றும் அரசியலமைப்பு பாரம்பரியத்தை மெதுவாக நசுக்க பாஜக அரசு பாடுபடுவதாகவும் சாடினார். இந்தியாவின் ஆனமாவான இவர்களை பிரிக்க முடியாது என்றும், இந்த பெயர்களை நீக்கிவிட்டு புதிய பாரதத்தை உருவாக்க முடியாது என்றும் உறுதிபட தெரிவித்தார்.

மகாத்மா காந்தி பெயரிலான திட்டத்தின் மூலம் வேலையைக் கோருவதற்கான சட்டப்பூர்வ உரிமையாக இருந்தது, புதிய மசோதா மூலம் சலுகையாக மறியுள்ளதாகவும், மாநில அளவிலான ஒதுக்கீட்டை ஒருமனதாக தீர்மானிக்க ஒன்றிய அரசுக்கு அதிகாரம் அளிப்பதாகவும், மாநிலங்கள் நிதி ரீதியாக பொறுப்பேற்கும் வகையிலும் இருப்பதாக குறிப்பிட்டார்.

புதிய மசோதா எஸ்சி, எஸ்டி, ஓபிசி மற்றும் சிறுபான்மை பெண்கள் மீதான தாக்குதல் என்றும், பெண்களின் கட்டாய பிரதிநிதித்துவத்தை நீக்கும் வகையில் இருக்கிறது என்றும், திட்டம் உருவாக்கப்பட்ட நோக்கத்தை நீர்த்துப்போகச் செய்யுமே தவிர தற்செயலானது அல்ல என்பதை நிரூபிக்கிறது என்றும் ஒன்றிய அரசுக்கு தெளிவுபடுத்தி உள்ளார்.

முந்தைய திட்டத்தின் முக்கிய உத்தரவாதங்களை வெளிப்படையாக அகற்றுவதற்குப் பதிலாக, இந்த மசோதா மறுவடிவமைப்பு மூலம் அவற்றை வெறுமையாக்குகிறது என்றும், 2000ஆம் ஆண்டுக்கு முந்தைய திட்டங்கள் கிராமப்புற தகுதிகளை நிவர்த்தி செய்யத் தவறிவிட்டன என்பதை வரலாறு காட்டுகிறது என்றும் எடுத்துரைத்தார்.

வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தை விரிவுபடுத்த மட்டுமே தேவையே தவிர, அதற்கு பதிலாக மற்றொரு மாற்று திட்டம் தேவையில்லை என்றும் ஒன்றிய அரசின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

அரசியல் கட்சிகளின் ஆலோசனை இல்லாமல் புதிய மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதால், தினசரி ஊதியம் ரூ. 500 வழங்கப்படுவதையும், கட்டாய வேலை நாட்களின் எண்ணிக்கை 150ஆக உயர்த்தப்படுவதையும் ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும் என திமுக எம்.பி. கிரிராஜன் வலியுறுத்தியுள்ளார். இந்த திட்டத்தின் பெயரை மாற்றியதான் மூலம் மகாத்மா காந்தியை நீங்கள் மீண்டும் ஒரு முறை கொன்று இருக்கிறீர்கள் என தனது உரையில் ஒன்றிய அரசை கடுமையாக சாடிய எம். பி. கிரிராஜன், நீங்கள் எத்தனை முறை கொன்றாலும், அவரது கொள்கைகளை கொல்ல முடியாது என திட்டவட்டமாக தெரிவித்தார்.



## இந்திய காப்பீட்டுத் துறையை அந்நிய காப்பீடு நிறுவனங்களுக்கு தாரை வார்க்கும்

# காப்பீட்டுச் சட்டங்கள் திருத்த மசோதாவை திரும்பப் பெறுக!

## மக்களவையில் – வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.21–

இந்தியக் காப்பீடு நிறுவனங்களுக்கு எதிராக இந்திய காப்பீடு துறையை அந்நிய காப்பீடு நிறுவனங்களுக்கு தாரை வார்க்கும் "காப்பீடு சட்டங்கள் திருத்த மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று திமுகவைச் சார்ந்த வேலூர் மக்களவைத் தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் மக்களவையில் வலியுறுத்தி பேசினார்.

அது வருமாறு:–

இன்று நான் இந்த காப்பீடு சட்டங்கள் திருத்த மசோதாவை வெறுமனே எதிர்க்கவில்லை. ஒன்றிய அரசு இந்த மசோதா மூலம் சமூகப் பாதுகாப்பை விற்பனை செய்வதை நான் எதிர்க்கிறேன்.

மேலோட்டமாகப் பார்க்கும் போது இந்த மசோதா தொழில்நுட்ப ரீதியானது போலத் தோன்றலாம்.

ஆனால் அதன் விளைவுகள் ஆழமான சித்தாந்தம் சார்ந்தவை, ஆழமான அரசியல் சார்ந்தவை, மிகவும் ஆபத்தானவை.

காப்பீடு என்பது சமூகப் பாதுகாப்பு – அது ஒரு சந்தைப் பண்டம் அல்ல.

காப்பீடு என்பது ஏழை எளிய மக்களின் வாழ்க்கை ஆரோக்கியம், மரணம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றுடன் தொடர்புடையது.

அதனால்தான் நமது அரசியலமைப்புச் சட்டம் சமூகப் பாதுகாப்பை சமூக நீதியின் கட்டமைப்பிற்குள் வைத்தது.

இருப்பினும், இந்த மசோதா காப்பீட்டை மற்றொரு முதலீட்டுத் துறை போல நடத்துகிறது. பிரிவு 7, 100% அந்நிய நேரடி முதலீடு என்பது நமது காப்பீடு துறையை அந்நியத் நிறுவனங்களுக்கு 100% சரணடைதலுக்கு சமம்.

காப்பீட்டுச் சட்டத்தில் பிரிவு 3AA–ஐ சேர்க்கும் பிரிவு 7–இன் மீது இந்த அவையின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

இந்த ஒரே பிரிவு இந்திய காப்பீட்டு நிறுவனங்களில் 100% அந்நிய நேரடி முதலீடு மூலம் ஏகபோக உரிமையை அந்நிய காப்பீடு நிறுவனங்களுக்கு அனுமதிக்கிறது.

இதன் பொருள் என்ன என்பதைப் பற்றி நாம் நேர்மையாக கூர்ந்து நோக்க வேண்டும்.

இதன் பொருள்:

அந்நிய நிர்வாகக் குழுக்கள் இந்திய பிரீமியங்களைத் தீர்மானிக்கும். அந்நிய நாட்டு பங்குதாரர்கள் இந்திய விலக்குகளைத் தீர்மானிப்பார்கள். அந்நிய முதலீடு வெளியேற்றங்கள் இந்திய காப்பீடு துறை பாதுகாப்பின்மையை முடிவு செய்யும்.

லாபம் குறையும்போது, மூலதனம் வெளியேறும் ஆனால் மக்களால் நோய், மரணம் அல்லது முதுமையிலிருந்து வெளியேற முடியாது என்பது உண்மை.

"மூலதனம் சமூகத்தை ஆளும் போது, மனிதநேயம் பிணையப் பொருளாகிறது. என்று தந்தை பெரியார் அன்றே நம்மை எச்சரித்தார்:

பிரிவு 7 இந்திய மக்களின் வாழ்க்கையை பிணையப் பொருளாக்குகிறது.



இந்த மசோதா பெயரில் தான் "அனைவருக்கும் காப்பீடு உள்ளது. உண்மையில் இது பெருமுதலாளிகளின் நிறுவனங்களுக்கான காப்பீடு.

இந்த மசோதா உண்மையாகவே அனைவருக்கும் காப்பீடு என்றால், சமூகக் கடமையை விட முதலீட்டு நெகிழ்வுத் தன்மைக்கு முன்னுரிமை அளிக்க பிரிவு 27–ஐ ஏன் இந்த மசோதா திருத்தி எழுதுகிறது?

நாடாளுமன்ற ஒப்புதல் இல்லாமல் முதலீடுகளை வழிநடத்தும் அதிகாரத்தை IRDAI–க்கு பிரிவு 20 ஏன் வழங்குகிறது?

இந்த மசோதா காப்பீட்டுக்கு உத்தரவாதம் அளிக்கவில்லை.அது மூலதன சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. இது அனைவருக்கும் காப்பீடு அல்ல. இது அனைத்தும் பெருநிறுவனங்களுக்கானது என்பது வெட்ட வெளிச்சம். இந்திய ஆயுள் காப்பீடு கழகத்தை (LIC) திட்டமிட்டு பலவீனப் படுத்துதல், எல்.ஐ.சி. என்பது ஏதோ மற்றுமொரு காப்பீட்டு நிறுவனம் மட்டு மல்ல. அது மக்களின் சேமிப்பைக் கொண்டு கட்டப்பட்ட ஒரு மக்கள் நிறுவனம். ஆனால்> அத்தியாயம் III–ஐ, குறிப்பாகப் பாருங்கள்:

எல்.ஐ.சி சட்டத்தைத் திருத்தும் 77 முதல் 82 வரையிலான பிரிவுகள்.

இந்தப் பிரிவுகள் எல்.ஐ.சி–யின் தனித்துவமான சட்டப்பூர்வத் தன்மையைப் பறிக்கின்றன.

அதை ஒரு சந்தை சார்ந்த நிறுவனம் போலச் செயல்படத் தூண்டுகின்றன. பன்னாட்டு காப்பீட்டு நிறுவனங்களு டன் சமமற்ற போட்டிக்குள் தள்ளுகின்றன. தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் மறுத்தபோது, எல்.ஐ.சி. மட்டுமே விவசாயி கள், பெண்கள் மற்றும் கிராமப்புறக் குடும்பங்களுக்குக் காப்பீடு வழங்கியது. இந்த மசோதா, எல்.ஐ.சி–யின் இந்த கருணை, பரிவுக்காக அதைத் தண்டிக்கிறது.

"பொது நிறுவனங்கள் சந்தை அநீதிகளைச் சரி செய்யவே உள்ளன, அவற்றுக்கு அடிபணிய அல்ல. என்று நமது முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி கூறியுள்ளதை இந்த அவையோர் மத்தியில் பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த மசோதா அதற்கு நேர்மாறாகச் செய்கிறது.

பிரிவு 34–ஐ திருத்தும் பிரிவு 30 மூலமாகவும்> பிரிவு 34A–ஐத் திருத்தும் பிரிவு 31 மூலமாகவும்> IRDAI–க்கு பின்வரும் பரந்த அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன:

1. கட்டுப்படுத்தும் உத்தரவுகளைப் பிறப்பித்தல்

2. சட்டவிரோதமாகப் பெற்ற லாபத்தைத் திரும்பப் பெற உத்தரவிடுதல்

3. மேலாண்மை மற்றும் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துதல்

ஆனால்> இதற்கான கண்காணிப்பு எங்கே? எனவே இந்த மசோதா பிரிவுகள் 30 & 31 – ஜனநாயகம் இல்லாத ஒழுங்குமுறை அதிகாரத்தை வழங்குகிறது.

இந்த அதிகாரங்களில் பெரும்பாலானவை சட்டங்கள் மூலம் அல்லாமல்> ஒழுங்குமுறைகள் மூலமே செயல்படுத்தப் படுகின்றன. அதனால் நாடாளுமன்றம் புறக்கணிக்கப்படுகிறது. ஜனநாயகம் புறந்தள்ளப்படுகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத நபர்களின் கைகளில் அதிகாரம் குவிக்கப்படுகிறது.

பிரிவு 15 பாதுகாப்பு இல்லாத தரவு மையப்படுத்தல்:–

புதிய பிரிவுகள் 14A, 14B மற்றும் 14C–ஐச் சேர்க்கும் பிரிவு 15–ஐப் பார்ப்போம். இந்த விதிகள் பின்வருவனவற்றை அனுமதிக்கின்றன:

KYC–யின் மையப்படுத்தப்பட்ட செயலாக்கம் உணர்திறன் வாய்ந்த சுகாதாரம் மற்றும் நிதித் தரவுகளைப் பகிர்ந்து கொள்ளுதல் காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் இடைத்தரகர்களால் பெரிய அளவிலான தரவுத் திரட்டல்

ஏற்கனவே இந்தியாவில் தரவு மீறல்களுடன் இன்னும் போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில், இந்த மசோதா தரவுக் கணக்குறுதி இல்லாமல் தரவுகள் மீதான அதிகாரத்தை உருவாக்குகிறது.

இது டிஜிட்டல் ஆளுகை அல்ல, இது தரவுத் திருட்டு. தரவு காலனித்துவம். (Data Colonialism)

பிரிவுகள் 59 முதல் 63 வரை – விகிதாசார நீதி இல்லாமல் அபராதங்கள் என்பது நியாயமற்றது. பிரிவுகள் 59, 61 மற்றும் 63 இன் கீழ், அபராதங்கள் ஒரு நாளைக்கு 1 லட்சம் முதல் அதிகபட்சம் 10 கோடி வரை இருக்கலாம் தெளிவான சட்டப்பூர்வ பாதுகாப்புகள் இல்லாமல், இது ஒருவித அச்சத்தால் ஒழுங்கு முறையாக மாறும், நியாயத்தால் ஆன ஒழுங்குமுறை அல்ல.

நீதி என்பது விகிதாசாரமாக இருக்க வேண்டும். அதிகாரம் பொறுப்பேற்க வேண்டும்.

பிரிவு 69 – நாடாளுமன்றத்திற்கு வெளியே சட்டம் இயற்றுதல் பிரிவு 69 மூலம், பிரிவுகள் 114B மற்றும் 114C ஐ செருகுவதன் மூலம், துணை வழிமுறைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளது. இந்த சபையோர் இதை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த வழிமுறைகள்: பிணைப்பு சக்தியைக் கொண்டிருங்கள் இங்கே விவாதிக்கப் படவில்லை ஒப்படைக்கப்பட்ட சட்டம் ஜனநாயக விவாதத்தை மாற்றுகிறது.

விளக்கம் மூலம் நோக்கத்தை மீறலாம் இது பின் வாசல் வழியாக கார்ப்பரேட்டுகளுக்கு சாதகமான சட்டம் இயற்றுதல் போலாகும்.

கூட்டாட்சி முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது. காப்பீடு பாதிக்கிறது:

மாநில சுகாதாரத் திட்டங்கள், கூட்டுறவு காப்பீட்டு சங்கங்கள், வேலை வாய்ப்பு மற்றும் நலன்புரி வழங்கல்,

ஆனால் ஒரு பிரிவு கூட இவற்றை கட்டாயப்படுத்துவதில்லை:

மாநில ஆலோசனை, கூட்டாட்சி ஒப்புதல், கூட்டுறவு பாதுகாப்பு, இது நாம் கண்ட அதே முறையைப் பின்பற்றுகிறது:

ஜி.எஸ்.டி., நீட், நிதி ஆணைய அநீதி, தமிழ்நாடு நிர்வகிக்கப்படுகிறது, ஆலோசிக்கப்படவில்லை.

ஆபத்தை யார் தாங்குவது?

ஏழைகள் பிரீமியத்தை செலுத்துகிறார்கள். நிறுவனங்கள் ஈவுத் தொகையை சேகரிக்கின்றன.

தனியார் காப்பீட்டாளர்கள் சிறந்த லாபம் அடைய எல்.ஐ.சி. நஷ்டங்களுக்கு பொறுப்பேற்கிறது.

இந்த மசோதா அந்நிய காப்பீடு நிறுவனங்களுக்கு லாபத்தை வெகுமதியாக அளிக்கிறது. அதே நேரத்தில் எல்.ஐ.சி. யின் பரிவு/ இரக்கத்தை தண்டிக்கிறது. லாபம் பாதுகாக்கப்படுகிறது. மக்கள் சொல்லொணாத் துயரத்துக்கு ஆளாகி அம்பலப்படுத்தப்படுகிறார்கள்.

முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் நிலைப்பாடு – இறுதி எச்சரிக்கை.

எளியோரைப் பாதுகாக்கவே அரசு உள்ளது. வலியோரை வலுப்படுத்த அல்ல என்று பேரறிஞர் அண்ணா கூறியதை இங்கு பதிவு செய்கிறேன்.

மேலும் "அறம் இல்லாத சந்தைகள் ஜனநாயகத்தை அழித்துவிடும். என்று முத்தமிழறிஞர் கலைஞர் கூறினார்.

இந்த மசோதாவின் ஒவ்வொரு பிரிவும் வலியோரை வலுப்படுத்தி, எளியோரை ஏமாற்றிக் கைவிடுகிறது.

முடிவுரை இந்த மசோதா வாயிலாக ஒன்றிய அரசு உங்கள் பாதுகாப்பு லாபத்தையே சார்ந்துள்ளது.

உங்கள் ஒப்புதல் அவசியமற்றது என்று மாநிலங்களிடம் சொல்கிறது. உங்கள் பங்கு சடங்கு ரீதியானது மட்டுமே என்று நாடாளுமன்றத்திடம் சொல்கிறது: மேலும் இந்தியாவின் சமூகப் பாதுகாப்பு வணிகத்திற்காகத் திறக்கப்பட்டுள்ளது என்று பெருநிறுவனங்களிடம் சொல்வது போலுள்ளது. மசோதாவின் இந்த வெளிப்பாட்டை நாங்கள் நிராகரிக்கிறோம்.

தமிழ்நாட்டின் பிரதிநிதியாக, திராவிட சமூக நீதியில் நம்பிக்கை கொண்டவனாக, அரசியலமைப்புச் சோசலிச சமூகநீதிப் பாதுகாவலனாக> இந்த மசோதாவை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

ஒன்றிய அரசு இதைத் திரும்பப் பெற வேண்டும் அல்லது குறைந்தபட்சம் நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்று நான் கோருகிறேன். சமூகப் பாதுகாப்பு ஒருபோதும் விற்பனைக்கு அல்ல.மக்களின் சேமிப்பு என்பது வெளிநாட்டு மூலதனம் அல்ல. இந்தியா ஒரு பெருநிறுவனக் காப்பீட்டுக் காலனியாக ஒருநாளும் மாறாது.

இவ்வாறு கதிர் ஆனந்த் எம்.பி. நாடாளுமன்ற மக்களவையில் காப்பீடு சட்டங்கள் திருத்த மசோதா விவாவதத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.



நெல்லை மாவட்டம், ஆலங்குளம், நந்தவன கிணறு பகுதியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரைக் கூட்டம் பாகம் 60ல் நடைபெற்றது. கூட்டத்தில் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் கணேஷ் குமார் ஆதித்தன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறினார். நகர செயலாளர் வழக்கறிஞர் எஸ்பிடி.நெல்சன் தலைமை தாங்கினார்.நகர பொருளாளர் சுந்தரராஜன், தொழிலதிபர் ஜி.எஸ்.செல்வம்,BLA2 வேலுமணி, BDA.C.முருகன், சரஸ்வதி பாஸ்கர், கந்தசாமி,RMKV ராஜ், BLC உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஆந்திராவில் நடைபெறும் தேசிய யோகா போட்டியில் பங்கேற்கும் புதுச்சேரி மாணவர்களுக்கு தி.மு.கழகம் சார்பில் சீருடை, உபகரணங்களை மாநில கழக அமைப்பாளர் ஆர். சிவா எம்.எல்.ஏ. வழங்கினார்.